உடைந்த உள்ளங்களுக்கு

# இயேசுவின் சமாதானம்

வருடம் 12

மாதம் 4



## இயேசு உங்களை சுமப்பார்

அக்டோபர் 2013

ஏ.எஸ்.வி. ராபின்



# கடந்த மாதம் இயேசுவின் கிருபையினால்
# ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் தேவசெய்தி கொடுத்த இடங்கள்



ஓ.பி.சி. சபை இருகூர்
செப்டம்பர் 22



ஓ.பி.சி. சபை இருகூர்



ஓ.பி.சி. சபை இருகூர்



ஓ.பி.சி. சபை இருகூர்



ஓ.பி.சி. சபை இருகூர்



மாரநாதசபை, விஸ்வநாதபுரம்
செப்டம்பர் 1



இயேசுவின் சமாதானம்
பரவச நேரம்

தமிழன் டி.வி.யில்

| அக்டோபர் | |
|---|---|
| 14 | 28 |
| திங்கள் | |

ஒவ்வொரு 2வது, 4வது திங்கட்கிழமைகளிலும்

காலை 7.15

இமயம் டி.வி.யில்

IMAYAM

| அக்டோபர் | |
|---|---|
| 8 | 22 |
| செவ்வாய் | |

ஒவ்வொரு 2வது, 4வது செவ்வாய்க்கிழமைகளிலும்



தேவ செய்தி & ஜெபம் ஏ.எஸ்.வி.ராபின் & பொற்செல்வி ராபின்




**என் அன்பு அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகளே!**

**மகிமையின் ராஜா இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்.**

இதுவரை நம்மை கைவிடமால் பாதுகாத்துவரும் நம் அன்பின் தேவன் இயேசுவுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்தி அவரை மகிமைப்படுத்துவோம். மனித அன்பு, மாறிக் கொண்டே இருக்கிறது. ஆனால் நம்மை உருவாக்கிய தேவன் இயேசுவின் அன்பு மாறுவதே இல்லை. ஏனெனில் இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும் என்றும் மாறாதவர் (எபி 13:8).

இயேசுவைப் பற்றிய சுவிஷேசம் உலகமெங்கும் அறிவிக்கப்படும். அதன் பின்பு முடிவு வரும் (மத் 24:14). ஆகவே நீங்கள் ஒவ்வொருவரும் இயேசு தான் உலகத்தை உருவாக்கிய தேவன் என்று அறியாமல் வாழ்கிற மக்களுக்கு, மிக சீக்கிரமாய் இயேசுவை அறிவியுங்கள். இது நம்மேல் விழுந்த கடமை. எங்களையும், இயேசுவின் சமாதானம் ஊழியத்தையும் நேசித்து ஜெபம் மற்றும் நன்கொடையினால் நீங்கள் தாங்கி வருகிறீர்கள். இதற்கேற்ற பலனை இப்பூமியிலும், நீங்கள் நிறைவாய் பெறும்படி கர்த்தாதி கர்த்தர், ராஜாதி ராஜா இயேசு கிருபை செய்வார். திரியேக தேவனுக்கே மகிமை.

தினமும் **1 நிமிடமாவது** எங்களுக்காக, ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.
நீதி 21 : 31ன் படி ஆண்டவர் இயேசு உங்களுக்கு வெற்றி தருவார்.
இயேசுவின் சமாதானம் நம்மோடு இருப்பதாக.

**With Deep Love & Affection With Prayer**

உங்கள் அன்புத் தம்பி / அண்ணன்

**- ஏ.எஸ்.வி. ராபின்.**



இயேசுவின் சமாதானம் (உடைந்த உள்ளங்களுக்கு)
மாத இதழ்

**Final Designing & Editing**

**ராஜ்லின்ட் ராபின்** B.Sc.,Vis.com., (M.B.A.)

Managing Partner, Rajlynt Exports & Imports

வருத்தப்பட்டு
பாரம் சுமக்கிறவர்களே,
நீங்கள் எல்லாரும்
என்னிடத்தில் வாருங்கள்.
நான் உங்களுக்கு
இளைப்பாறுதல்
தருவேன் (மத் 11 : 28).



# இயேசு உங்களை சுமப்பார்

ஏ.எஸ்.வி. ராபின்

அண்ட சராசரங்களையும், நம்மையும் படைத்து அரசாட்சி செய்கிற ராஜாதிராஜா இயேசு சொல்லும் ஆறுதலான வார்த்தைகள் இவைகள். ஆகவே நம்முடைய எல்லா பாரங்களையும், ஜெபத்தில் இயேசுவின் மேல் வைத்துவிடுவோம். அவர் நமக்கு தெய்வீக சமாதானத்தை தருவார்.

## பாவம் சுமந்த இயேசு

இயேசு நம்முடைய பாவங்களை சுமந்து, தீர்க்க வெளிப்பட்டார். ஆனால் அவரிடத்தில் பாவமில்லை (1யோவான் 3 : 5) தேவன் நம்மை அவருடைய சாயலாக படைத்தார். தேவன், இயேசு என்ற பெயரில் இவ்வுலகில் பிறப்பதற்கு முன், ஆதியில் மனிதர்களை ஏன் படைத்தேன் என வேதனைப்பட்டார். (ஆதி 6:6). ஏனெனில் மனிதர்கள் செய்த பாவங்கள், அக்கிரமங்கள் அவர் உள்ளத்தை உடைத்தது. மனிதர்கள் பாவம் செய்து மிருகங்களை பலி கொடுத்து மீண்டும் பாவம் செய்து மீண்டும் மிருகங்களை பலி கொடுத்து, மீண்டும் இதே கதை தொடர்ந்தது. இந்த பாவத்தினால் நாம் பரலோக பாக்கியத்தை இழந்துவிடக்கூடாது. நரகத்தீயில் விழுந்துவிடக் கூடாது என்பதற்காக தேவன் மனிதராக இந்த பூமியில் பிறந்தார். நம்முடைய பாவங்களுக்காக தம்மை பலி கொடுக்க ஒப்புக்கொடுத்து, தம்முடை பரிசுத்த ரத்தத்தை சிந்தி தன் உயிரை கொடுத்தார். நம் பாவங்களை சுமந்த இயேசு மகா பரிசுத்தர். இந்த அன்புக்கு ஈடாக இவ்வுலகில் யாரையும் நாம் ஒப்பிட முடியாது. இயேசுவின் அன்பு அவ்வளவு பெரிய அன்பு.

## நாம் சுமக்கும் சிலுவை

இயேசு சொல்கிறார், தன் சிலுவையை சுமந்து கொண்டு எனக்கு பின் செல்லாதவன் எனக்கு சீஷனாய் இருக்கமாட்டான் (லூக் 14: 27). சிலுவை என்பது பாடுகளையும், முடிவில் வெற்றியையும் குறிக்கிறது. இவ்வுலகில் பாடுகள் இல்லாதவர்கள் யாரும் இல்லை. இயேசுவே தேவன் என்பதை அறிந்து, அவரை தன் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டவர்களுக்கு, பாடுகள் முடிவில் வெற்றியைத் தரும். ஏனெனில் இயேசு பாரமான நம் பாவங்களையும், கனமான சிலுவையையும் சுமந்து முடிவில் சாத்தானை ஜெயித்தார். மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார். இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார். ஆகவே பிரச்சனைகள் வரும் பொழுது நாம் செய்த, செய்கிற பாவங்களை தேவ சமூகத்தில் சொல்லி அதை விட்டுவிடுவோம். பிறகு நாம் அல்ல, நமக்குள் இயேசு தங்கி, இந்த பாடுகளை சுமப்பார்.



நாங்கள் ஜெபிக்கும் வேளையில் இயேசு எங்களோடு பேசும் ஒரு காரியம், என்னை அன்று ஒரு தடவை சிலுவையில் அடித்தார்கள். ஆனால் இன்று பல மனிதர்கள், பாவம் செய்து மீண்டும், மீண்டும் என்னை சிலுவையில் அடிக்கிறார்கள். இந்த சிலுவைப் பாடுதான் எனக்கு அதிக

வேதனையை தருகிறது என்பார். இதைக் கேட்கும் போது நாங்கள் உள்ளம் உடைந்து அழுவோம். இயேசுவுக்கு பிரியமாய் நாம் வாழும் போது பாடுகள் அனைத்தும் முடிவில் நமக்கு சந்ததோஷ பாடல்களாக மாறும்படி தேவன் இயேசு கிருபை செய்வார்.

## நான் சுமந்த பாரம்

இயேசுவின் கிருபையினால் நான் என் 21வது வயதில் வல்லம் (தென்காசி) என்ற கிராமத்திலிருந்து கோவை வந்தேன். ஒரு பக்கம் ஆடிட்டரிடம் ஜுனியராக இணைந்து பணியாற்றினேன். இன்னொரு பக்கம் வெட்கிரைண்டர் தொழில் செய்தேன். மிக கடினமாக உழைக்க கர்த்தர் இயேசு எனக்கு கிருபை தந்தார். வெட் கிரைண்டரை தென்காசி, களியக்காவலை, சென்னை போன்ற இடங்களுக்கு இரவு நேரத்தில் லாரியில் ஏற்றி அனுப்புவோம்.



லாரியில் ஏற்றும்போது, நானும் மற்றவர்களோடு சேர்ந்து அதை சுமந்து லாரியில் ஏற்றுவேன். வியாபாரத்தில் பிரச்சனைகள் வரும்பொழுது, உள்ளம் உடைந்து அழுவேன். ஒருபக்கம் கிரைண்டரை சுமந்த வலியினால் உடல் பாரம். இன்னொரு பக்கம் மனபாரம். இந்த இரண்டு பாரங்களும் என்னை மிக அதிகமாக அழுத்தியது. அப்பொழுது இயேசுவை முழுமையாக ஏற்றுக் கொள்ளாததால் பாரங்கள் கடுமையாக தோன்றியது. என் திருமணத்திற்கு பின் இயேசுவை முழுமையாக ஏற்று அவரை நம்பி வாழ்ந்தேன். பின்னர் தொழிலில் வரும் பிரச்சினைகள், பாரங்கள் எல்லாம் எனக்கு லோசாக மாறியது. ஏனென்றால் எனக்குள் இருக்கும் இயேசு எல்லா பாரங்களையும் சுமந்தார்.

இவ்வுலக, பரலோக வாழ்விற்காக இயேசு தரும் கட்டளைகள் கடுமையாக தோன்றும். ஆனால் முடிவிலே அது பெரிய ஆசீர்வாதத்தை தரும். இயேசு சொல்கிறார், என் சுமை இலகுவாய் இருக்கிறது (மத் 11 : 30). நாம் அனைவரும் இயேசுவின் பிள்ளைகள். பூமியில் நாம் படும் பாடுகள் நிரந்தரமல்ல. சுமையாய் தோன்றும். பாடுகளை தாண்டிவர இயேசு நமக்கு பெலன் தந்தருளுவார், நாம் நம் முழு பாரத்தையும் நம்மை உருவாக்கிய தேவன் இயேசுவின் மேல் வைத்துவிட வேண்டும். அவரே நம்முடைய பாரத்தை சுமப்பார். ஆனால் நாம் அவருடைய பாரத்தை சுமக்க வேண்டும். அது, பிறர் பாரத்தை நம் பாரமாக சுமப்பது (கலா 6:2). நாம் நம்மைப்பற்றி கவலைப்படாமல் மற்றவர்களின் பாரத்தை உணர்ந்து அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அப்பொழுது இயேசுவின் உள்ளம் மகிழும்.

நம் கவலை கண்ணீர் எல்லாவற்றையும் மாற்றி, இயேசு நம் பாரங்களை மட்டுமல்ல நம்மையும் சுமந்து, இப்பூமியிலும், பின் பரலோகத்திலும் உயர்வாய் வாழ வைப்பார்.




visit our website

*peaceofjesus.org*

(or) *peace of jesus* (or) *asv robin*



இதன் மூலம் இந்தியா மற்றும் உலக தேசமெங்கும் இயேசுவின் சமாதானம் ஊழியங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், இயேசுவின் சமாதானம் பத்திரிக்கையை (E-magazine) வாசிக்கவும், ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் கொடுத்த வீடியோ செய்திகளைப் பார்க்கவும் தேவன் இயேசு கிருபை செய்திருக்கிறார். நீங்கள் இதன்மூலம் இயேசுதரும் ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்ள அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

பைபிளும் நாட்டு நடப்பும்

உண்மை சம்பவம்







# ஏமாறும் மக்கள்

ஏ.எஸ்.வி. ராபின்

ஒரு மனிதரை அவருடைய செயலினால் அறியலாம் (மத் 7:16)

இன்று மந்திரவாதிகள், அருள்வாக்கு சொல்பவர்கள், சாமியார்கள், சித்தர்கள் என்று தேடி, ஓடி ஏமாறும் மக்கள் ஏராளம், ஏராளம்.

## அசுத்த மனிதர்

சென்னை பிராட்வேயில், மெட்ரோ ரயில் திட்ட வேலை நடக்கிறது. அங்கு இடிபாடுகளின் ஓரமாக ஒருவர். மேலாடை இல்லை, லேசான தாடி, இடுப்பில் ஒரு துண்டு. எந்நேரமும் சிகரெட் புகைப்பார். அசுத்தமான மனிதர் இவர்.

## ஏமாறும் மனிதர்கள்

இவரை பார்க்கும் பலர் இவரை ஆசி வழங்கும் சாமியாராக நினைத்து இவருக்கு 1 டீயும், 1 சிகரெட்டும் வாங்கி கொடுத்து, அவரிடம் அருள்வாக்கு வாங்குகிறேன் என்று தங்களுடைய இருள் வாழ்க்கையை தேடிக் கொள்கிறார்கள்.

## போலீஸின் சாட்சி

இவரைப் பற்றி அங்கு பாதுகாப்பு பணியில் இருக்கும் ஒரு போலீஸ் கூறுகையில் அட, இவர் ஒரு மனநிலை பாதிக்கப்பட்டவர். கிட்டவே போக முடியாத அளவு அவர் மேல் நாற்றம் அப்படி அடிக்கிறது. ஒரே சிகரெட் புகை. தாங்க முடியவில்லை, துரத்திவிட்டோம். இப்பொழுது பப்ளிக் கக்கூஸ் பக்கம் பஸ் ஸ்டாண்ட் ஒதுக்குப்புறமாக டெண்ட் அடித்து உட்கார்ந்திருக்கிறார், என்று சலித்துக் கொண்டார்.

## ஒரு பத்திரிக்கையாளர் சாட்சி

நாமும் சாமியாரைப் பார்த்தோம், ஒரு பெண் பக்தர் சிகரெட், டீயுடன் அவர் தரிசனத்திற்கு வந்திருந்தார். 2 பேர் வரிசையில் காத்திருந்தனர். போட்டோ எடுக்கும் பொழுது பெண்கள், படம் புடிச்சா போட்டோ விழாது என்று நம்மை அன்பாய் எச்சரித்தனர். போட்டோ எடுத்தோம். தெளிவாக பதிவானது. எங்களைப் பார்த்த அந்த போலி சாமியார், கையை உயர்த்தி, போங்கடா இங்கிருந்து, என்று திட்டினார். வெகுவிரைவில் அந்த இடத்தில் சித்தர் மடம் உருவாகும் வாய்ப்பை உணர முடிந்தது.

## உங்கள் ஆசீர்வாதம்

நீங்கள் இருக்குமிடத்தில் இருந்தே, உலகத்தையும், உலக மனிதர்களையும், அண்ட சராசரங்களையும் படைத்து ஆளுகை செய்கிற மகா பரிசுத்தர் இயேசுவை நோக்கி கூப்பிடுங்கள். அவர் உங்களை தேடி வந்து ஆசீர்வதிப்பார். இயேசு சொல்கிறார், நான் பரிசுத்தர். ஆகையால், நீங்களும் பரிசுத்தராய் இருங்கள் (லேவி 19:2), நானே உன் பரிகாரியான கர்த்தர் (யாத் 15:26) (சுகமாக்குகிற பிரச்சனையிலிருந்து விடுதலை தருகிற தேவன்).



# என் மகளே

பெண்கள் பகுதி



- பொற்செல்வி ராபின்

என் பாசத்திற்குரிய சகோதரியே,

இறைவன் இயேசுவின் இனிய பெயரால் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். திரியேக தேவன் உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக.

## நீதிமான்களை நேசிக்கிறார்

கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாய் இருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்கு திறந்திருக்கிறது என்று சங் 34:15ம் வசனத்தில் தேவன் இயேசுவைப் பற்றி கூறப்பட்டுள்ளது. தேவனுக்கு பயந்து வாழும் மக்களுக்கு தேவன் இயேசு எப்போதும் உதவி செய்ய ஆவலோடு இருக்கிறார். எப்பொழுதும் ஆயத்தமாய் இருக்கிறார். ஒவ்வொரு பெண்ணையும் தேவன் ஒரு நோக்கத்திற்காக உருவாக்கி, அவர்கள் உலக வாழ்வில் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை அவர்களுக்கு கொடுத்திருக்கிறார். இதோடுகூட தன் குடும்பத்தை பராமரிக்கும் காரியத்தை ஒவ்வொரு பெண்ணும் செய்து, நீதியோடு வாழ வேண்டும் என்பது தேவனுடைய திட்டமும், இதய விருப்பமுமாய் இருக்கிறது.

## குணசாலியை நேசிக்கிறார்

தன் கைகளினால், உற்சாகத்தோடு வேலை செய்கிறாள் என்று நீதிமொழிகள் 31:13ம் வசனம் குணசாலியான பெண்ணைக் குறித்து கூறுகிறது. சில சகோதரிகள் மற்ற சகோதரிகளோடு வீணான காரியங்களை பேசி, பொழுதை போக்கி, குடும்பத்தினருக்கு செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்காய் செய்வதில்லை. சில சகோதரிகள் தொலைக்காட்சிப்



பெட்டிக்கு முன்பாக அமர்ந்து, பொழுது போக்கு காட்சிகளை பார்த்து அதோடு ஒன்றிப் போய் குடும்பத்தையே மறந்துவிடுகின்றனர். ஏற்ற வேளையில் கணவருக்கு உணவு சமைத்து வைப்பதில்லை. பணி அல்லது தொழில், வியாபாரம் செய்து, கணவர் உணவு சாப்பிட பசியோடு வீட்டுக்கு வரும் போது உணவு கொடுக்காததால் அவர் மனைவியின் மேல் கோபமும், எரிச்சலும் அடையும் நிலை உருவாகி விடுகிறது. இதனால் வாய்த்தகராறு, அடிதடி ரகளை ஏற்படுகிறது. கணவர், பிள்ளைக்கு உடுத்த ஏற்ற

உடைகளை ஒழுங்கு செய்து வைப்பதில்லை. உடைகளில் உள்ள உடைந்த பட்டன்களை அகற்றி, புது பட்டன்களை தைத்து வைப்பதுமில்லை. தேவன் இயேசு, கணவன், பிள்ளைகளை, குடும்பத்தாரை நன்றாய் கவனித்துக் கொள்ளும் பெண்களையே, குணசாலிகளையே நேசிக்கிறார்.

## நலிந்தவரை நேசிக்கிறார்

நீங்கள் உடல் பெலவீனத்தால் கலங்குபவராய் இருக்கலாம். இயேசு உங்களை நேசிக்கிறார். அவர் உங்களை கைவிடமாட்டார். உடல் ஊனமுற்றவராய் நீங்கள் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறீர்களா? இயேசு உங்களை பார்த்து சொல்கிறார், நான் உன்னை பலப்படுத்தி உனக்கு சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னை தாங்குவேன். (ஏசாயா 41:10) எல்லா பெலவீனத்திலும் உடல் ஊனத்திலும் தேவன் இயேசுவை உண்மையாய், முழு மனதோடு தேடுங்கள். உலகம் தரமுடியாத மனநிம்மதி என்று அழைக்கப்படுகிற சமாதானத்தை தேவன் இயேசு உங்களுக்கு தருவார். எனக்கு சர்க்கரை வியாதி அல்லது குறைந்த ரத்த அழுத்தம் (low BP) . வயதான நிலையில் இருக்கிறேன். என் பசிக்கு உடனே என் குடும்பத்தினர் உணவு தருவதில்லை என்று வருந்துகிறீர்களா? கர்த்தர் நிச்சயம் உங்கள் குடும்பத்தினர் உங்களுக்கு ஏற்ற வேளையில் உணவு தர செய்வார்.



## தவிப்பவரை நேசிக்கிறார்

எனக்கு திருமணம் ஆகவில்லை. வயதான நிலையில் தனியாய் வாழ்கிறேன். உடன் பிறந்தோர் திருமணம் செய்துகொண்டு போய்விட்டார்கள். எனக்கு, தனிமை வாழ்வு வேதனை தருகிறது என்கிறீர்களா? பைபிள் வாசியுங்கள், வேத வசனங்கள் மூலம் தேவன் இயேசு உங்களோடு பேசுவார். உங்களை தேற்றுவார். இயேசு உங்களுக்கு மணவாளனாக இருப்பார், உங்களுக்கு தகப்பனாகவும், தாயாகவும் இருக்கிறார். என் கணவர் என்னை விவாகரத்து செய்து விட்டார். பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு என்மேல் வந்தது. எப்படி சமாளிக்கப்போகிறேன் என்று தெரியவில்லையே என்று தவிக்கிறீர்களா? தவிக்கிற உங்களை தேவன் இயேசு நேசித்து, உங்களுக்கு வருமானத்தை தருவார். உடனே ஏதாவது வேலைக்கு செல்லுங்கள். தொழில், வியாபாரம், செய்யக்கூடிய ஞானம் இருந்தால், ஞானமாய் செயல்பட்டு வருமானத்திற்காக பாடுபடுங்கள். கட்டாயம் அன்போடும், இரக்கத்தோடும், பரிசுத்தத்தோடும் வாழுங்கள்



இயேசு உங்களை என் மகளே , என் மகளே என்று அன்போடு அழைத்து, தன் அன்பை உங்கள் மேல் பொழிகிறார், மகிழ்ந்திருங்கள்.

YouTube ஏ.எஸ்.வி. ராபின் - பொற்செல்வி ராபின் கொடுத்த தேவ செய்திகளைக் கண்டு தேவன் இயேசு தரும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்
keyword : ASV Robin, Rajlynt Robin, Porchevi Robin





# கேள்வி பதில்

ஏ.எஸ்.வி. ராபின்

**கேள்வி**

நான் கர்த்தர் இயேசுவுக்கு பிரியமாய் ஒரு தொழில் செய்ய விரும்புகிறேன். என்ன தொழில் செய்வது என்று தெரியவில்லை. என்ன தொழில் செய்யலாம்?

**ஆர். எபிநேசர்**
திருநெல்வேலி




**பதில்**

இயேசுவுக்கு பிரியமாய் தொழில் செய்ய வேண்டும் என்ற உங்கள் எண்ணம் ஆண்டவர் இயேசுவுக்கு சந்தோஷத்தை தரும். எந்த ஒரு வேலை, வியாபாரம், தொழில் செய்தாலும் அது இயேசுவுக்கு பிரியமானதா அல்லது இதனால் இயேசுவின் பெயர் களங்கப்படுமா? மற்றவர்களுடைய ஆசீர்வாதத்தை பாதிக்குமா என்று யோசித்து பார்க்க வேண்டும். நீங்கள் உபவாசித்து ஜெபித்து எதையும் தொடங்குங்கள். என்ன தொழில் செய்யக் கூடாது என்று தெரிந்து கொண்டு அதை தவிர்த்து விடுங்கள். ஒவ்வொரு மனிதரும், தேவனுடைய ஆலயம். நாம் செய்யும் வேலை, வியாபாரம், தொழில் நம்மையோ, பிறரையோ பாவத்திற்குள் தள்ளுவதாய் இருந்தால், நம்மேல் தேவகோபம் வரும். முடிவில் நம் ஆத்துமாவை தேவன் நரகத்தில் தள்ளுவார். பல கிறிஸ்தவர்கள் மளிகை கடையில், சிகரெட், புகையிலை, போதை பாக்குகளை விற்கிறார்கள். இது தேவன் இயேசுவின் உள்ளத்தை துக்கப்படுத்தும். மது பார் நடத்துவது, மற்றும் சினிமா சம்மந்தப்பட்ட அத்தனையும் இயேசுவுக்கு பிரியமில்லாதது. தியேட்டர், சினிமா தயாரிப்பு, சினிமா டைரக்ஷன், சினிமா விநியோகம், சினிமா இசையமைப்பு, சினிமாவில் பாடுவது, நடிப்பது ஒரு வேளை இதை செய்பவர்கள் தங்களை பரிசுத்தமாய் காத்துக் கொண்டாலும், மற்றவர்களை சினிமா பாவத்தில் தள்ளும்.

இயேசுவின் பெயரில் ஜெபித்து, ஒருவர் விபச்சாரவிடுதி நடத்தினால் இயேசு இதை அங்கீகரிப்பாரா? ஒரு வேளை அதை நடத்துகிறவர் தன்னை பரிசுத்தமாய் காத்துக் கொள்ளலாம். ஆனால் இதன் மூலம் பாவத்தில் விழும் மக்களுக்கு இதை நடத்துகிறவரே பொறுப்பு. ஆகவே, மிக ஜாக்கிரதையாய் நம்முடைய, மற்றவருடைய ஆத்துமாக்களை காத்துக் கொள்ள வேண்டும். என் நண்பரின் அப்பா, ஒரு கூட்டத்தில் சாட்சி சொன்னார், நான் ரட்சிக்கப்படுவதற்கு முன் சிகரெட் பிடிப்பேன். ஆலயத்திற்கும் செல்வேன். சிகரெட் புகைக்கும் முன் அந்த சிகரெட்டில் சிலுவை போட்டு, பின் புகை பிடிப்பேன் என்றார். இப்பொழுது அது தவறு என்பதை உணர்ந்தேன் என்று சாட்சி சொன்னார். இயேசுவின் பெயரைச் சொல்லி எதைச் செய்தாலும் அதை இயேசு அங்கீகரிக்கமாட்டார். ஆகவே யோசித்து ஜெபித்து, ஜாக்கிரதையாய் எதையும் செய்யுங்கள். அப்பொழுது இயேசு உங்களை ஆசீர்வதிப்பார்.

## நன்மை தரும் இயேசுவின் சமாதானம் பத்திரிக்கை



அன்பு சகோதரர் ஏ.எஸ்வி. ராபின் அவர்களை வாழ்த்தி ஆசீர்வதித்து ஜெபிக்கிறேன். தாங்கள் வெளியிடுகிற இயேசுவின் சமாதானம் என்கிற மாதப்பத்திரிக்கையை நான் தொடர்ந்து படித்து வருகிறேன். இதில் வேதவசனங்களின் ஆதாரத்தோடு நன்மையான விஷயங்களை தெளிவாய் எழுதி வருவதற்காக நான் தங்களை பாராட்டி உங்களுக்காக ஜெபிக்கிறேன். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஏழை மக்கள், வியாதியஸ்தர், ஊனமுற்றோர், முதியோர் மத்தியில் தாங்கள், தங்கள் மனைவி , மகன் நிறைவேற்றி வருகிற நலதிட்டங்களை அறிந்து தேவனை துதிக்கிறேன். கர்த்தர் இயேசுவுக்கே மகிமை உண்டாவதாக.

பாஸ்டர் **வி. பால்ராஜ்குணா** D.D.

ஆசிரியர் : கிருபையின் கரம், தேவகிருபை ஜெப வீடு, பெரியமேடு, சென்னை.

உலக மக்களின் நல்வாழ்வை விரும்பும்

# இயேசுவின் சமாதானம் ஊழியங்கள்

## ஜெபித்துக்கொள்ளுங்கள்

– ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின், ராஜ்லின்ட் ராபின்

- ✦ திக்கற்றோர், ஊனமுற்றோர், முதியோர் மத்தியில் ஊழியம்
- ✦ உள்தேச, வெளிதேச பிரசங்க ஊழியம்
- ✦ ஏழைகள் மத்தியில் சுவிசேஷம் மற்றும் உதவி
- ✦ ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம்
- ✦ மருத்துவமனை ஊழியம்
- ✦ தொலைக்காட்சி ஊழியம்
- ✦ உபவாச ஜெப ஊழியம்
- ✦ தொலைபேசி ஊழியம்
- ✦ மலைப்பகுதி ஊழியம்
- ✦ பத்திரிக்கை ஊழியம்
- ✦ கைப்பிரதி ஊழியம்
- ✦ புத்தக ஊழியம்
- ✦ கடித ஊழியம்
- ✦ பாடல் ஊழியம்
- ✦ மனநல காப்பக ஊழியம்
- ✦ மிஷனெரி ஊழியம்
- ✦ இலங்கை அகதிகள் மத்தியில் ஊழியம்
- ✦ விளம்பரம் மூலம் சுவிசேஷ ஊழியம்




















# இயேசுவின் சமாதானம் ஜெபம் & ஆலோசனை மையம்

## ஜெப வேண்டுகோள் (சபை ஊழியம் அல்ல)

## Peace of Jesus Prayer & Counseling Centre

கர்த்தர் இயேசுவின் கிருபையினால் இயேசுவின் சமாதானம் நற்செய்தி கூட்டங்கள், தனிஜெபம், குடும்ப ஆலோசனை, தொலைபேசி, குழுஜெபத்தின் மூலமாக இதுவரை பல ஆயிரக்கணக்கான வாலிபப்பிள்ளைகளும், குடும்பத்தினரும், ஆசீர்வதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் பாவம், சாபம், பில்லிசூனிய மாந்திரீக கட்டுகளிலிருந்து விடுதலைப்பெற்று, தற்கொலையிலிருந்து, விடுவிக்கப்பட்டு வாழ தேவன் இயேசு கிருபை செய்திருக்கிறார்.

இந்த ஊழியத்திற்கென்று இதுவரை சொந்த இடமில்லை. ஆகவே ஜெபம் மற்றும், ஆலோசனை மையம் கட்டும்படியாக தேவன் இயேசு எங்கள் உள்ளத்தை மிகவும் நெருக்கி ஏவுகிறார். இடத்திற்கு மட்டும் ரூபாய் **4 கோடியே 80 இலட்சம்** தேவைப்படுகிறது. கர்த்தரின் கிருபையினால் இடம் வாங்கி கட்டியபின் அனைத்து மக்களும், வந்து ஜெபம் மற்றும் ஆலோசனைப் பெற்றுச் செல்லவும், இங்கு சிறப்பு கூட்டங்களில் கலந்து கொண்டு விடுதலை, அற்புதம், ஆசீர்வாதம், சமாதானம் பெற்றுச் செல்லும்படியாக தேவன் கிருபை செய்வார். ஆகவே இந்த மகத்தான பணிக்கான பணத் தேவை சீக்கிரம் சந்திக்கப்பட உங்கள் தனி ஜெபம், குடும்ப ஜெபம், குழு ஜெபத்தில் நினைவு கூர்ந்து, ஜெபிக்க அன்போடு கேட்டுக் கொள்கிறோம். தேவன் இயேசு உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பார். கர்த்தர் இயேசுவையும், இயேசுவின் சமாதானம் ஊழியத்தையும், எங்களையும், நேசிக்கிறவர்கள், இவ்வூழியம் மூலம் ஆசீர்வாதம் பெற்றவர்களில் சிலர், இந்த இடத்தை வாங்குவதற்கான தொகையில் ஒரு குறிப்பிட்ட பகுதியை தங்கள் சொந்த இடத்தை, நிலத்தை விற்றுத்தருவதாக பொருத்தனை செய்திருக்கிறார்கள். கர்த்தர் இயேசுவுக்கே மகிமை

**- ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின்.**

## இந்த ஊழிய தேவைக்கான உங்கள் ஜெபம்

இயேசுவின் சமாதானம் ஊழியத்தின் எல்லை ஒவ்வொரு மாதமும் விரிவாகிவருவதால், பணத் தேவை ஒவ்வொரு மாதமும் அதிகமாகிறது. ஒரு மாதத்திற்கு பல லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. இத்தேவைகள் சந்திக்கப்பட மறக்காமல் நீங்கள் உங்கள் ஜெபத்தில் தாங்கும் படி அன்போடு கேட்டுக் கொள்கிறோம். தேவன் இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக.

## உங்கள் நன்கொடை

நீங்கள் இவ்வூழியத்திற்கு நன்கொடை அனுப்ப விரும்பினால் இந்தியாவில் நீங்கள் எங்கு வசித்தாலும் கீழ்கண்ட வங்கிக் கிளைகளில் நேரடியாக பணத்தைச் செலுத்தலாம் அல்லது மணியார்டர், டி.டி. மூலமாக நன்கொடை அனுப்பலாம்.

| | |
|---|---|
| ICICI Bank | PEACE OF JESUS MINISTRY & TRUST A/c No. 615201134411<br>A.S.V. ROBIN A/c. No. 615201500867 |
| IDBI BANK | PEACE OF JESUS MINISTRY A/c No. 006102000034441 |
| State Bank of India | A.S.V. ROBIN A/c. No. 31682257041 |
| TMB Tamilnad Mercantile Bank Ltd | A.SOLOMON VICTOR ROBIN A/c. No. 058100050303244 |
| Indian Overseas Bank | A.S.V. ROBIN A/c. No. 010601000025999 |
| इंडियन बैंक Indian Bank | YESUVIN SAMADHANAM A/c No. 725420502<br>A.S.V. ROBIN A/c. No. 434465781 |



வாலிபர் பகுதி

# தேவனே! என் தேவனே!

– பொற்செல்வி ராபின்

அன்புத் தம்பி, தங்கையே,
பரிசுத்த தேவன் இயேசுவின் பெயரால் உன்னை அன்புடன் வாழ்த்துகிறேன். தேவாதி தேவனுக்கே மகிமை!

## தேவனுடைய கிருபை

உன் பிராணனை (உயிரை) அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னை கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயை திருப்தியாக்குகிறார்; கழுகுக்கு சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகிறது. என்று சங்கீதம் 103 : 4, 5ம் வசனங்களில் வாசிக்கிறோம். இவை யாவுமே தேவாதி தேவன் இயேசு, உனக்கு செய்யும் நன்மைகள் ஆகும். என் தேவன் எனக்கு இவ்வளவு நன்மைகள் செய்திருக்கிறாரே என்று நினைத்து அவருக்கு நன்றி செலுத்தி, அவரை மகிமைப்படுத்து. நீ இன்று வரை உயிரோடு இருப்பது தேவனுடைய கிருபை தான்.

## தேவனுடைய ஆலயம்

பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரை தொழுது கொள்ளுங்கள்; பூலோகத்தாரே நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள் என்று சங்கீதம் 96 : 9 - ல் உலக மனிதர்கள்



தேவனுக்கு பயந்து நடுங்கி வாழ வேண்டும் என்ற கட்டளை தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீ எப்படிப்பட்ட அலங்காரத்தோடு தேவ சமூகத்தில் காணப்பட வேண்டும் என்று தேவன் இயேசு எதிர்பார்க்கிறார்? கோபம், பகை, வெறுப்பு, கசப்பு, வைராக்கியம், இல்லாத சுத்த இதயத்தோடு நீ காணப்பட வேண்டும். நீ ஜெபம் செய்ய வேண்டும். தேவனுடைய ஆலயத்துக்குள் நுழையும் போதே உன் உள்ளத்தில் பயம் காணப்பட வேண்டும். உன் உயிர் தேவனுடைய கையில் இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு காரியத்திலும் பயந்து நட, பயந்து பேசு.

## தேவனுடைய பாதுகாப்பு

தேவன் இயேசு தரும் பாதுகாப்பு தான் ஒரு மனிதனுக்கு பாதுகாப்பாய் இருக்கும். உன்னை எதிர்க்கும் பொல்லாத பிசாசு கூட்டம், நோய் கிருமிகள், பொறாமை கொண்ட மனிதர்கள், காரணமில்லாமல் உன் மேல் எரிச்சலாயிருக்கிறவர்கள், உன் உள்ளத்தில் ஏற்படும் பயம், பில்லி சூனியம் இவையாவற்றிலுமிருந்தும் இயேசு உன்னை காப்பார். உன்னை காக்கக்கூடியவர் தேவன் இயேசு ஒருவரே. ஆகவேதான் தேவனே, என் தேவனே என்று ஒவ்வொரு நாளும், அடிக்கடி இயேசுவை உன் உள்ளத்தில் அன்போடும், தெய்வ பயத்தோடும் கூப்பிடு. அவரை தேடு, அவரோடு ஜெபத்தில் நெருங்கி உரையாடு, உறவாடு.

## தேவனுடைய உணர்த்துதல்



இப்படி அவரை உறுதியாய் பற்றிக் கொண்டு அவரை நீ நேசிக்கும் போது, நன்மை எது, தீமை எது என்று உனக்கு உணர்த்துவார். உன்னை தீங்குக்கு விலக்குவார். நீ செய்த பாவங்களை நினைவுபடுத்தி நீ பாவி, நீ பாவி, ஆகவே உன் தேவன் உன்னை கைவிட்டு விட்டார், நீ உயிர் வாழ்வதில் பயனில்லை என்று சாத்தான் உன்னை வேதனைப்படுத்தினால், உடனடியாக உண்மையாய் ஜெபிக்க கூடியவரிடம் சென்று உனக்காக ஜெபிக்க சொல். உண்மையாய் என் தேவனே, என் இயேசுவே என்று அழுது அவரிடம் உன் பாவங்களை சொல்லி, உன்னை அழுத்தும் மனபாரத்தை அவருடைய பாதங்களில் இறக்கி வை. உன் கண்ணீரை பார்த்து, இயேசு உனக்கு பாவ மன்னிப்பு தருவார். உனக்கு சந்தோஷத்தை தந்து வாழ வைப்பார்.





இந்த சிறியரில் ஒருவனுக்கு... எவைகளை செய்தீர்களோ, அவைகளை எனக்கே செய்தீர்கள் (மத் 25:40) என்ற இயேசுவின் வார்த்தையின்படி நீங்கள் எங்களோடு இணைந்து, ஏழைகளுக்கும், தேவையுள்ளோருக்கும் உதவி செய்யலாமே? இதற்குரிய பலனையும், ஆசீர்வாதத்தையும் தேவன் இயேசு உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் இவ்வுலகில் தந்து மகிழப் பண்ணுவார். தேவ கிருபையினால் நாங்கள் நிறைவேற்றி வரும் நலத் திட்டங்களை இயேசுவின் சமாதானம் பத்திரிக்கையின் மூலமாக நீங்கள் அறிவீர்கள்.

ஏழைகள், திக்கற்றோர், பசியினால் வாடுபவர்களுக்கு ஆறுதல் சொல்லி, உதவி செய்வது தேவன் இயேசுவின் நோக்கமாய் இருக்கிறது. திக்கற்றநிலையில் உள்ள சிறு பிள்ளைகளின், வாலிப பிள்ளைகளின் படிப்பிற்கு தேவையான பணஉதவி, ஊனமுற்றோர்,முதியோர், ஏழைகள், நோயினால் அவதிபடுவோர் போன்றோருக்கும் இவ்வூழியத்தின் மூலம் உதவி செய்ய இயேசு கிருபை செய்கிறார். நீங்கள் இவ்வுழியத்திற்கு பண உதவி செய்து தாங்கும்படி அன்போடு கேட்டுக் கொள்ளுகிறோம்.

இயேசுவின் சமாதானம் ஊழியத்தின் மூலம் செய்யப்படும் 18 வகையான ஊழியங்களுக்கு, மாத மாதம் பல லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே நீங்களும் எங்களோடு இணைந்து மாத மாதம் ரூபாய் 100 முதல் லட்சம் வரை நன்கொடை கொடுத்து இயேசுவின் ராஜ்ஜியத்தை கட்ட அன்போடு அழைக்கிறோம்.

**ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் இயேசுவின் சமாதானம் இந்தியா**




# வேத வினாப் போட்டி

(அனைவரும் கலந்து கொள்ளலாம்)யோபு 30-37

"தங்கள் எண்ணத்தில் ஞானியாய் இருக்கிற எவர்களையும் அவர் (தேவன்) மதிக்கமாட்டார்"

- சொன்னவர் யார்?

சென்ற மாத சரியான விடை

ஆதியாகமம் 24:40 ஆபிரகாம்



ஆக்னஸ் லாரன்ஸ்

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 20.10.2013**

# இயேசுவின் சமாதானம் பெறுங்கள்

இயேசுவின் சமாதானம் மூலம் வெளியிடப்பட்ட
உடைந்த உள்ளங்களுக்கு
**பரவசப் பாடல்கள் - பாகம் - 1 ACD**
வேண்டுவோர் ரூ. 50/-ம்





இயேசுவின் சமாதானம் **பரவச நேரம்**
ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின்
கொடுத்த 4தேவ செய்திகள் அடங்கிய
**DVD** பெற விரும்பினால் ரூ. 50/-ம்



பொற்செல்வி ராபின் எழுதிய
பரலோக, நரக தரிசனங்கள் அடங்கிய
**நித்திய வாழ்வின் ரகசியங்கள்**
புத்தகம் பெற விரும்புவோர்
ரூ. 30/-ஐ அனுப்பி, தபாலில்
பெற்றுக் கொள்ளுங்கள்.

எங்கள் முகவரி
**இயேசுவின் சமாதானம்**
393, பேஸ் 2,
ஹவுசிங் யூனிட், சிட்கோ,
கோயம்புத்தூர் - 641 021,
தென் இந்தியா



Our Address
**PEACE OF JESUS**
393. Phase 2,
Housing Unit, SIDCO,
Coimbatore - 641 021.
S.India

ஜெப உதவி / தொடர்புக்கு : (+91) 9994510610
Email: asvrobin@gmail.com www.peaceofjesus.org



தொடர் - 96

# இயேசுவின் ரகசிய வருகை

– பொற்செல்வி ராபின்

## நல்ல மரம்

நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும். (மத் 7:17)

இவ்வுலக வாழ்வில் மனிதர்கள் நல்லவர்களாக் வாழ்வது கூடாத காரியம். நான் நல்ல மரமாய் இருந்து நல்ல கனி கொடுக்க முடியாது. பாவம் நிறைந்த இந்த உலகில் இது நடக்கிற காரியமா? என்று சொல்பவர்களைப் பார்த்து தேவன் இயேசு கூறுகிறார். உன்னால் இது கூடாததுதான். ஆனால் மனுஷரால் கூடாதது தேவனால் கூடும். உன்னை நல்லவனாக மாற்றுவதற்காகத்தான் சிலுவை பாடுகளையும் சிலுவை மரணத்தையும் நான் ஏற்றுக் கொண்டேன். உன்னை நல்லவனாக, நல்லவளாக வாழ வைக்க என்னால் முடியும்.

## தாமரை இலை

தண்ணீர் நிறைந்த குளங்களில் தாமரை செடிகளை நாம் காணலாம். தாமரை இலைகள் மேல் தண்ணீர பட்டாலும், தண்ணீர் நனைக்க முடியாதபடி இந்த இலைகள் பளபளவென வழுவழுப்பாய் இருக்கின்றன. ஆகவே தண்ணீர் துளிகள் இலைகள் மேல் விழுந்ததும் நீர் துளிகள் உருண்டு



கீழே விழுகின்றன. இதுபோல பாவம், அக்கிரமம் நம்மை நெருங்கினாலும், நம்மை தொட முயற்சித்தாலும், இவை விலகி போகத்தக்கதாக, நாம் இறைவன் இயேசுவோடு இணைந்து வாழ வேண்டும். பரிசுத்த தேவன் இயேசுவின் பெலத்தால் இவை நம்மை விட்டு விலகி ஓடும்.

## சாத்தான் பொய்யன்

எத்தனையோ குடும்பங்களில் சாத்தான் புகுந்து கொண்டு கணவன் மனைவி உறவை கெடுத்து விடுகிறான். கணவர் உள்ளத்தில் மனைவியைப்பற்றி சந்தேகத்தை விதைத்து விடுகிறான்.

நல்ல ஒழுக்கமுள்ள மனைவியை சந்தேகப்பட்டு அடித்து துன்பப்படுத்தும் நிலையை உருவாக்கி விடுகிறான். சாத்தான் பொய்யன் சாத்தானை நம்பி கெட்டுப் போகும் மக்கள் ஏராளம். நல்ல கணவரை, மனைவி சந்தேகப்பட வைத்து, கணவரும், மனைவியும் சண்டை போட வைப்பவனும், இந்த கீழ்த்தரமான சாத்தான்தான். சிலரை கவலையை மறக்க மதுவை பருகு என்கிறான். தேவன் இயேசு எத்தனையோ நல்ல காரியங்களை இவர்களுக்கு கூறுகிறார். ஆனால் கெட்டதைதான் கூறுவதை கேட்கிற இவர்கள் இயேசுவின் நல்ல ஆலோசனையை கேட்பதில்லை. குடித்து, உடலை கெடுத்து, வாழ்வு கெட்டு, ஓர் நாள் இறந்து, நரகத்தீயில் விழுகிறார்கள்.

நல்ல கனி கொடாத மரங்கள் (மனிதர்கள்) யாவும் வெட்டப்பட்டு, தேவனால் நரகத்தீயில் வீசப்படும். (மத் 7: 19) இதை உணர்ந்து, தேவன் இயேசு என்னுடைய ஒவ்வொரு பேச்சையும், செயலையும், உள்ளத்தின் சிந்தனையையும் பார்த்துக் கொண்டே இருக்கிறார் என்பதை நினைத்துப் பயந்து வாழ்வோம். – தொடரும்





இயேசுவின் சமாதானம் ஊழியம் தொடர் 14

# தேவன் தந்த கிருபை

- பொற்செல்வி ராபின்

உன் தேவனாய் இருக்கிற கர்த்தராகிய (இயேசுவாகிய) நான் உன் வலது கையைப் பிடித்து பயப்படாதே, (இயேசுவாகிய) நான் உனக்கு துணை நிற்கிறேன் என்று சொல்கிறேன். (ஏசா 40 :13)

## ஆச்சரியமான ஆரம்பம்

என் கணவர், ஒருவர் கேட்டுக் கொண்டதின் பேரில் மருத்துவமனையில், உடல் நலம் குன்றிய நிலையில் இருந்த ஒரு சகோதரியை பார்த்து ஜெபிக்க சென்றார்கள். அவர்கள் வியாதிப்பட்டு மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த நேரம். அவர் இயேசுவை அறியாத சகோதரி. என் கணவர் அவரிடம் இயேசுவின் அன்பைப் பற்றி கூறி அவர்களுக்காக ஜெபித்தார்கள். பின்பு அவர்கள் சுகமாகி வீடு திரும்பினார்கள். ஆனாலும் அதிக பெலவீனத்தோடு காணப்பட்டார்கள். அவர்களுடைய வீடு கோவையில் உள்ள மலைப்பகுதியில் (பிள்ளையார் புரம்) என்ற இடத்தில் இருந்தது. இப்படித்தான் முதலாவது மலைப்பகுதி ஊழியம் அவர் வீட்டில் நாங்கள் ஆரம்பிக்க தேவன் இயேசு அருள் புரிந்தார்.

## மலைப்பகுதியில் சுவிசேஷம்

ரஞ்சிதம் என்று இந்த சகோதரிக்காக ஜெபிக்க நானும், என் கணவரும் முதல் முறையாக எங்கள் வீட்டிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மலைப்பகுதிக்குச் சென்றோம். இவர்களுக்கு இயேசுவின் சிலுவை அன்பை மீண்டும் கூறி இவருக்காக ஜெபித்தோம். இவர் தேவ கிருபையால் நல்ல சுகமாய் இருக்கிறார்கள்.

## அற்புதங்களின் தேவன்

இன்னொரு சகோதரி, அங்கே காசநோயிலும், (டி.பி) வறுமையிலும் வாடினார்கள். கணவரால் கைவிடப்பட்ட நிலையில் இருந்த அவருக்கு 2 சிறு பிள்ளைகள். அவர்களுக்கு பண உதவி செய்து இயேசுவைப் பற்றி கூறினோம். பைபிள் கொடுத்து அவர்களுக்காக உபவாசித்து ஜெபித்தோம். கர்த்தர் இயேசு டி.பி. நோயிலிருந்து பூரண விடுதலை கொடுத்தார். அது மட்டுமல்ல அவர்களுடைய வீட்டின் வறுமையை போக்கி, அவர்களை ஆசீர்வதித்தார். அங்கே இன்னொரு சகோதரியின் கணவரை, போதை பழக்கத்திலிருந்து தேவன் இயேசு விடுவித்தார். இன்னொரு சகோதரி வீட்டில் மின்சார வசதியை கொடுத்து தேவன் இயேசு ஒளியை கொடுத்தார். இந்த சகோதரிகள் இயேசுவின் சமாதானம் பத்திரிக்கையில் சாட்சி எழுதி, தேவாதி தேவன் இயேசுவை மகிமைப்படுத்தினார்கள்.

- தொடரும்

## பாவத்திலிருந்து விடுதலை தந்த இயேசு

அன்பு சகோதரிக்கு,

நான் 6 ஆண்டுகளாக ஒருவரோடு தகாத உறவு வைத்திருந்தேன். எனக்கு கணவர், பிள்ளைகள் உண்டு. அந்த நபரோடு இருந்த உறவை அன்பு என்றே நினைத்து அந்த பாவத்தை விட முடியாமல் தவித்தேன். இந்த நிலையில் உங்களைக் குறித்து கேள்விப்பட்டேன். உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு என் நிலையை சொன்னேன். நீங்கள் எனக்காக தொலைபேசியில், இறைவன் இயேசுவிடம் ஜெபித்தீர்கள், அப்பொழுது என்னைவிட்டு அந்த விபச்சார ஆவி வெளியேறியது, தேவன் இயேசு என் உள்ளத்தில் பாவ மன்னிப்பின் சந்தோஷத்தை கொடுத்தார். பரிசுத்தமாய் வாழ தேவையான மனபலத்தை, எனக்கு தேவாதி தேவன் இயேசு கொடுத்ததற்காக அவருக்கு கோடான கோடி ஸ்தோத்திரங்கள்.

பெயர் வெளியிட விரும்பாத சகோதரி
திண்டுக்கல்.


SELVASINGH SPORTS & MUSICALS
YONEX, BDM, SS, SG, MASPRO, NIVYA, COSCO, VICKY, YONKAR, CRICKET BAT,
FOOT BALL, VOLLEY BALL, ROLLENSKATE, SPORTS SHOE, SPORTS CUPS, SWIM WEAR.
YAMAHA
CASIO
KEYBOARDS
Givson
Ragam
YAMAHA
சிறப்பு தள்ளுபடி விற்பனை 2013
PREETHI, PRESTIGE, PREMIER, PHILIPS, PIGEON, SONY, BUTTERFLY, BAJAJ, ULTRA, MILTON
PREETHI MIXIE
Rs.1500 வரை எக்ஸ்சேஞ்ச் தள்ளுபடி
PRESTIGE INDUCTION
Free
PIGEON INDUCTION
Crystall 2013 Special Offer
Rs. 2195 மட்டுமே
EMERGENCY LAMP
BPL
PIGEON
ROLLS
ONIX
BAJAJ
RECHARGEABLE FAN
PREMIER
எக்ஸ்சேஞ்ச்
ரூ. 1400*/- வரை
தள்ளுபடி
PRESTIGE GAS STOVE
30% எக்ஸ்சேஞ்ச் தள்ளுபடி
MILTON
15% வரை தள்ளுபடி
BAJAJ IRON BOX
MRP 600
Rs. 475
Only
MRP 549
Rs. 395
PHONE
Beetel, Panasonic
கம்பெனி விலையைவிட குறைவாக
SELVASINGH STORES
Opp Lakshmi Complex, Crosscut Road,
Coimbatore - 12. Ph : 2493987

JB HOMES

# Build your Home !....
# Like your Dreams !...

# ஜே.பி. ஹோம்ஸ்-ன் முதல் படைப்பு

ஒத்தக்கால் மண்டபம், கோயமுத்தூர்.

JENIFER NAGAR

100 VILLAS

DTP

## அப்ரூவ்டு வீட்டுமனைகள்

1. வங்கி கடன் 80% ஏற்பாடு செய்து தரப்படும்.
2. மனையிடங்களை பார்வையிட வாகன வசதி உள்ளது.
3. கோவை – பொள்ளாச்சி மெயின் ரோடு
4. மனையை சுற்றிலும் பாதுகாப்பு 24 மணி நேரமும்
5. சோலார் மின் விளக்குகள்
6. பைபாஸ் – 3 கி.மீ.
7. கற்பகம் மருத்துவக்கல்லூரி மிக அருகில்




BOOKINGS OPEN NOW

DON'T MISS IT

0422 2493370

தொடர்பு முகவரி :

**JB HOMES AND PROPERTY DEVELOPERS PVT LTD.**

No. 146, Ground Floor, 8th Street, Gandhipuram, coimbatore - 641 012.
Email id : jbpropertydeveloperspvtltd@gmail.com

# ஆறாத காயங்களை குணமாக்கிய இயேசு



நான் 11 முறை சிறைக்கு சென்றவன். 29 வெட்டு, குத்து கேசில் அகப்பட்டவன். 19 ஆண்டுகளாக காலில் அடிப்பட்ட காயத்தோடு வாழ்ந்தேன். 1996-ஆம் ஆண்டு நான் ஜெயிலில் இருந்தபோது, ஒரு தேவ ஊழியர் மூலமாக இயேசுவை என் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டேன். 17 ஆண்டுகளாக பல ஊர்களுக்குச் சென்று நற்செய்தி கூட்டங்களில், என் முந்தைய வாழ்க்கையின் சாட்சியைக் கூறி, தேவ செய்தி கொடுத்து வருகிறேன். 19 ஆண்டுகளுக்கு முன்பு என் காலில் ஏற்பட்ட காயங்களால் ஏற்ப்பட்ட வலியினால் அதிகமாய் துன்பப்பட்டேன். சில மருத்துவர்கள் காலை வெட்டி எடுக்க வேண்டும் என்றனர். சில மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்தால் கால் வலி குணமாகி விடும் என்று கூறினார்கள். ஆனால் அறுவை சிகிச்சைக்கு தேவையான பணம் என்னிடம் இல்லை.

கோவையில் இருந்த சகோதரி பொற்செல்வி ராபின் அவர்களோடு, ஜெப வேளையில் இயேசு என்னைக் குறித்து ஜுன் மாதம் பேசி இருக்கிறார் பீட்டர் வடிவுதாஸ் கால்வலி அதிகமாகி, பணக் கஷ்டத்தினால் சிரமப்படுகிறான். உடனடியாக அறுவை சிகிச்சை செய்யவேண்டும். உடனே அவனுக்கு பெரிய தொகையை அனுப்பும்படி, என் மகனிடம் (ஏ.எஸ்.வி. ராபின்) கூறு என்றார். உடனே சகோதரி, சகோதரனிடம் கூறினார். சகோதரர் உடனடியாக அந்த பெரிய தொகையை அனுப்பினார். தேவன் இயேசு அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடக்க கிருபை செய்தார். இப்பொழுது கால்வலி நீங்கி மிகுந்த மகிழ்ச்சியோடு வாழ்கிறேன். அவருடைய ஊழியத்தை அதிக உற்சாகத்தோடு செய்து வருகிறேன்.

அற்புதம் செய்து என்னை வாழ வைத்த தேவன் இயேசுவுக்கே மகிமை.

**சகோ. பீட்டர் வடிவுதாஸ் (ஏசிஏ சபை )**
**முன்னாள் சிறை கைதி**
5, திடீர் நகர், புரசவாக்கம், சென்னை - 600007.
0 98415 14695, 0 98401 48095

# ஆசீர்வாதம் தரும் இயேசுவின் சமாதானம்



நான் கடந்த 12 ஆண்டுகளாக இயேசுவின் சமாதானம் பத்திரிக்கையை தொடர்ந்து, படித்து வருகிறேன். கர்த்தர் இயேசுவின் கிருபையினால் ஒவ்வொரு மாதமும், புதிய கிருபைகளுடன் இப்பத்திரிக்கை வெளிவருகிறது. இப்பத்திரிக்கை ஊழியத்தை மிகுந்த சிரத்தை எடுத்து, வெளிகொண்டு வரும் ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் ஆகியோரை கர்த்தர் இயேசுவின் பெயரால் ஆசீர்வதித்து, ஜெபிக்கிறேன். இப்பத்திரிக்கையை படிக்கும் பலர் இப்பத்திரிக்கையின் மூலம் பெறும் ஆசீர்வாதத்தை என்னோடு பகிர்ந்து கொள்கிறார்கள். இவர்கள், தங்கள் வாழ்க்கையில் இயேசுவின் சமாதானத்தை பெற்று வருவதை குறித்து, மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இப்பத்திரிக்கையை மிக நேர்த்தியாக ஒவ்வொரு மாதமும் வெளிவரச் செய்யும் தேவாதி தேவன் இயேசுவை மகிமைப்படுத்துகிறேன்.

சகோ. **சி.ஆர். என் ராஜன்**
தமிழ்நாடு உயிர்மீட்சி சுவிஷேச ஊழியம், இருகூர், கோவை - 641 103.
**செல் : 9344855912**

Registered with Registrar of News Paper for India
RNI / TNTAM / 14783 / 2002

Postal Regsitration No. CB / 001 / 2012 - 2014
தனிப்பிரதி ரூ. 4/- ஆண்டு சந்தா - ரூ. 40/-

இயேசுவின் சமாதானம் — அனைவருக்கும் சுவிசேஷம்



இயேசுவை அறியாதவர்களுக்கு, இயேசுவின் சமாதானம் பத்திரிக்கை கொடுத்து, இயேசுவைப் பற்றி ஏ.எஸ்.வி. ராபின் அறிவித்தபோது.
(இடம் : தலைமை தபால் நிலையம் அருகில், கோயமுத்தூர்.)

ஏழைகளின் நலனில் — இயேசுவின் சமாதானம்



தேவை உள்ளோருக்கு பண உதவியை இயேசுவின் கிருபையினால் பொற்செல்வி ராபின் செய்த போது
(இடம்: நீலம்பூர், கோவை)

## இயேசுவின் சமாதானம் — உயிர்காக்கும் மருத்துவ உதவி







சிறுநீரக டயாலிசிஸ் சிகிச்சைக்கு பண உதவி செய்து இயேசுவைப் பற்றி அறிவித்து
நித்திய வாழ்வின் ரகசியங்கள் என்ற புத்தகத்தை
ராஜ்லின்ட் ராபின், ஏ.எஸ்.வி. ராபின் கொடுத்தபோது
(இடம் : செயின்ட் மேரீஸ் மருத்துவமனை, போத்தனூர், கோவை.)

## இயேசுவின் சமாதானம் பரவசப் பாடல்கள் - பாகம் 2

# என் இயேசு..

கர்த்தர் இயேசுவின் கிருபையால் நவீன இசையில்
உருவாகிக் கொண்டிருக்கும்,
உள்ளத்தை இயேசுவிடம் திருப்பும், இனிமையான
ஆடியோ சிடி, விடியோ சிடி 2013 ல் வெளிவர
ஜெபித்துக்கொள்ளுங்கள்.
பாடல். ராகம் & பாடுபவர்கள்
ராஜ்லின்ட் ராபின்
ஏ.எஸ்.வி. ராபின்



( இசை : ஜி.எம். ஞானகுமார், டிவைன் மெலடிஸ் )




Owned & Published By A.S.V. ROBIN Managing Trustee on behalf of Peace of Jesus Ministry & Trust 393, Phase - 2, Housing Unit, Sidco, Coimbatore - 641 021. and Printed at Vimal Offset Printing, Coimbatore - 641 012. India Editor : A.S.V. ROBIN